**தொடக்கக் கல்வி இணை இயக்குநரின்(நிர்வாகம்) செயல்முறைகள், சென்னை - 6**
**ந.க.எண் 00963 / டி3 /2024, நாள் 12.01.2024**

**பொருள்:** **தமிழ்நாடு தொடக்கக் கல்வி சார்நிலைப்பணி – தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடம் – 01.01.2024 நிலவரப்படி 31.12.2022 வரை தொடக்கப்பள்ளி தலைமையாசிரியராக பணியில் சேர்ந்து பணிபுரியும் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களின் மாநில அளவிலான உத்தேச முன்னுரிமைப்பட்டியல் வெளியிடுதல் - தொடர்பாக**

**பார்வை:** 1.அரசாணை ( நிலை ) எண் 12, பள்ளிக் கல்வித் (தொ.க.1(1) துறை, நாள் 30.01.2020
2.அரசாணை (நிலை) எண் 243 பள்ளிக்கல்வி (EE1) துறை, நாள் 21.12.2023

தமிழ்நாடு தொடக்கக் கல்வி சார்நிலைப்பணியில் வகுப்பு III வகை I ல் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடம் உள்ளது. 01.01.2024 நிலவரப்படி 31.12.2022 வரை தொடக்கப்பள்ளி தலைமையாசிரியராக பணியில் சேர்ந்து பணிபுரியும் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்களின் மாநில அளவிலான உத்தேச முன்னுரிமைப் பட்டியல் இத்துடன் இணைத்து வெளியிடப்படுகிறது.

இவ்வுத்தேச மாநில முன்னுரிப் பட்டியலை அனைத்து தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் வட்டாரக் கல்வி அலுவலர் மூலமாக சார்பு செய்யுமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் ( தொடக்கக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இம்மாநில முன்னுரிமைப் பட்டியலில் உள்ள தொடக்கப்பள்ளி தமைமையாசிரியர்களின் பெயர், பிறந்த தேதி, தொடக்கப்பள்ளி தலைமையாசிரியராக பணியில் சேர்ந்த நாள் (முற்பகல்/பிற்பகல், பணியாற்றும் மாவட்டம், ஒன்றியம் மற்றும் பள்ளியின் பெயர், தலைமையாசிரியர்களுக்கான EMIS ID மற்றும் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியராக பணிபுரியும் பள்ளியின் UDISE CODE ஆகிய அனைத்து விவரங்களும் சரியாக உள்ளதா என உறுதி செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், இப்பட்டியலில் மேற்கண்ட விவரங்களில் ஏதேனும் திருத்தம், சேர்க்கை, நீக்கம் ஆகியவை இருப்பின் சார்ந்த தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்களிடமிருந்து உரிய விவரங்களை பெற்று உடன் அனுப்பிவைக்குமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் ( தொடக்கக் கல்வி ) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்படும் திருத்தம், சேர்க்கை, நீக்கம் தொடர்பான அறிக்கையின் அடிப்படையில் உரிய திருத்தம் செய்து தொடக்கப்பள்ளி தலைமையாசிரிகளின் இறுதி மாநில முன்னுரிமைப் பட்டியல் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – 01.01.2024 நிலவரப்படி தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்களின் உத்தேச மாநில முன்னுரிமைப்பட்டியல்

/ ஒம் /

தொடக்கக் கல்வி இணை இயக்குநர் (நிர்வாகம்)

பெறுநர்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி)
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்

நகல்

அரசு செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை - 9
தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

www.Padasalai.Net